بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ

# ஜுமுஆ பேருரை

## அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உலகளாவிய தலைவர்
## ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்

(அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் – அல்லாஹ் தனது வல்லமை மிக்க உதவியினால் அவர்களை வலுப்படுத்துவானாக)

### பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாயிலில் *20.02.2015* அன்று ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்

**Summary of the Friday Sermon - 20 February 2015 (Tamil)**

இன்று பிப்ரவரி 20 ஆம் தேதியின் நாளாகும். இந்த நாள் அஹ்மதிய்யா ஜமாஅத்தில் வாக்களிக்கப்பட்ட சீர்திருத்தவாதி தொடர்பான முன்னறிவிப்புடன் தொடர்புடையதாகும். இன்று இந்த முன்னறிவிப்பு தொடர்பாக ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (அலை) அவர்கள் தமது வார்த்தைகளில் பல்வேறு சந்தர்ப்பங்களில் கூறியுள்ள விஷயங்களை உங்கள் முன்னால் எடுத்துக் கூறுவேன். எல்லா அம்சங்களையும் எடுத்துக் கூற இயலாது. சில விஷயங்களை சில மேற்கோள்களை எடுத்துக் கூறுவேன். 1944 –ல் முஸ்லிஹ் மவ்வூது தொடர்பான முன்னறிவிப்பின் பின்னணியை விளக்கிக் கூறியவாறு ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்:

இன்றிலிருந்து 58 வருடங்களுக்கு முன்னர் – அதாவது இன்று இந்த முன்னறிவிப்பு செய்யப்பட்டு 59 –வது ஆண்டு ஆரம்பமாகின்றது. 1886 ஆம் ஆண்டு பிப்ரவரி 20 ஆம் தேதி இந்த ஹோஸ்யார்பூரில் எனது விபரங்களுக்கு முன்னால் இருக்கின்ற இந்த வீட்டில் (அப்போது அவர்கள் ஹோஸ்யார்பூரில் சொற்பொழிவாற்றிக் கொண்டிருந்தார்கள். எதிரே மைதானத்தில் அந்த வீடு இருந்தது.) காதியானில் எவராலும் அறியப்படாத ஒரு நபர் அதுவும் காதியானிலுள்ள மக்கள் கூட அவரைப் பற்றி முழுமையாக அறியாதவர்களாக இருந்தனர். அவர் இஸ்லாத்தின் மீதும் இஸ்லாத்தின் தோற்றுனர் மீதும் மக்கள் காட்டிய எதிர்ப்பைப் பார்த்து தனது இறைவனை தனிமையில் வணங்கியவாறு அவனிடமிருந்து உதவி மற்றும் ஆதரவின் அடையாளத்தைக் கேட்பதற்காக அவர் வந்தார். 40 நாட்கள் மக்களை விட்டும் தனிமையாகப் பிரிந்திருந்து அவர் தனது இறைவனிடம் துஆக்களை வேண்டினர். 40 நாட்கள் செய்த துஆவிற்குப் பிறகு இறைவன் அவருக்கு ஒரு அடையாளத்தை வழங்கினான். அந்த அடையாளம் இதுவாகும். அதாவது இறைவன் அவர்களிடம் நான் உன்னுடன் செய்த வாக்குறுதிகளை நிறைவேற்றி விட்டு உனது பெயரை உலகின் எல்லை வரை எட்டும்படி செய்து விட்டு மட்டும் இருந்துவிட மாட்டேன். மாறாக, இந்த வாக்குறுதியை மேலும் மகிமையுடன் நிறைவேற்றுவதற்காக நான் உனக்கு ஒரு மகனை வழங்குவேன். அவர் சில சிறப்பான பண்புகளை உடையவராக இருப்பார். அவர் இஸ்லாத்தை உலகின் எல்லை வரை எட்ட வைப்பார். இறைவனின் வார்த்தைகளில் உள்ள ஞானத்தை மக்களுக்கு புரிய வைப்பார். கருணை மற்றும் அருளின் அடையாளமாக அது இருக்கும். இஸ்லாத்தை பரப்புவதற்காக தேவைப்படுகின்ற மார்க்க மற்றும் உலக அறிவுகள் அவருக்கு வழங்கப்படும். இவ்வாறே அல்லாஹ் அவருக்கு நீண்ட ஆயுளை வழங்குவான். எதுவரையென்றால் அவரது புகழ் உலகின் எல்லை வரை பரவிவிடும் என்று இறைவன் கூறினான்.

அவர்கள் கூறினார்கள்: இந்த பிரசுரம் வெளிவந்தபோது எதிரிகள் இதன் மீதும் ஆட்சேபனைகள் செய்வதின் ஒரு தொடரை ஆரம்பித்தனர். அப்போது 22 மார்ச் 1886 –ல் அவர்கள் இன்னொரு பிரசுரத்தையும் வெளியிட்டார்கள். எதிரிகள் இத்தகைய முன்னறிவிப்பின் மீது எவ்வாறு நம்பிக்கை வைக்க முடியும்? என்று ஆட்சேபனை செய்தனர். அதாவது எனக்கு ஒரு மகன் பிறப்பான் என்பது ஒரு முன்னறிவிப்பா? மக்களுக்கு மகன்கள் பிறப்பதே இல்லையா? உங்களுக்கு ஒரு மகன் பிறந்தாலும் அதன் மூலம் உலகில் இறைவனின் ஒரு சிறப்பான அடையாளம் நிறைவேறியுள்ளது என்பது எவ்வாறு நிரூபணமாகும்? என்ற எதிரிகளின் இந்த ஆட்சேபனைக்கு பதில் அளித்தவாறு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இவ்வாறு எழுதினார்கள்:

நான் எனக்கு ஒரு மகன் பிறப்பான் என்று மட்டும் கூறவில்லை. மாறாக, இறைவன் எனது துஆக்களை ஏற்றுக் கொண்டவாறு எத்தகைய அருளுக்குரிய ஒரு ஆன்மாவை அனுப்புவதாக வாக்குறுதி வழங்கியுள்ளான் என்றால் அதன் வெளிப்படையான மற்றும் அந்தரங்கமான அருள்கள் பூமி முழுவதும் பரவி விடும் என்றே நான் கூறியுள்ளேன் என்று ஹுஸூர் (அலை) அவர்கள் கூறினார்கள்.

இதைப் பற்றி ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: சில மக்கள் முஸ்லிஹ் மவ்வூது, ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களது ஏதாவதொரு வருங்கால சந்ததிகளிலிருந்து தோன்றுவார். அவர் 300 அல்லது 400 வருடங்களுக்குப் பிறகு வருவார். இந்தக் காலத்தில் அவர் வர முடியாது என்று கூறுகின்றனர். ஆனால், அவர்களில் எவரும் இறைவனுக்கு அஞ்சுவதில்லை. அவர்கள் முன்னறிவிப்பின் சொற்களைப் பார்க்க வேண்டும். அதைப் பற்றி சிந்திக்க

வேண்டும். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இந்த சமயத்தில் இஸ்லாத்தின் மீது இஸ்லாம் தன்னகத்தே அடையாளத்தைக் காட்டுவதற்கான சக்தியற்றதாக ஆகிவிட்டது என்று ஆட்சேபனை செய்யப்படுகின்றது என்று எழுதியுள்ளார்கள். ஆட்சேபனை செய்பவர்கள் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் இந்த துஆவை செய்த போது அல்லாஹ் அவர்களுக்கு இன்றிலிருந்து 300 வருடங்கள் கழிந்த பிறகு நான் உங்களுக்கு ஒரு மகனை வழங்குவேன் என்று செய்தி தெரிவித்ததாக கூறுகின்றனர். இது இஸ்லாத்தின் உண்மைக்கான அடையாளமாக இருக்கும் என்று கூறுகின்றனர். இதனை அறிவு ஏற்றுக் கொள்ளக்கூடிய விஷயமாக கருதுகின்றவர் உலகில் எவராவது இருக்க முடியுமா? பைத்தியக்காரர்களில் மிக மோசமான பைத்தியக்காரன் கூட இதைப் போன்ற விஷயத்தை பேச மாட்டான். மேலும் இறைவனுடனும் இறைவனது தூதருடனும் அவற்றை தொடர்புபடுத்திக் கூறமாட்டான்.

இந்த அடையாளத்தைக் கேட்ட அந்த மக்கள் உயிரோடு இருக்கின்ற மிக அண்மையிலுள்ள ஒரு காலக்கட்டத்தில் வெளிப்பட்டிருக்க வேண்டும். எனவே, அப்படித்தான் நடந்தது. 1889 –ல் எனது பிறப்பு அல்லாஹ்வின் முன்னறிவிப்பிற்கேற்ப நிகழ்ந்தது. அப்போது ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களிடம் அடையாளத்தைக் கேட்ட அந்த மக்கள் உயிருடன் இருந்தனர்.

தனது ஒரு கனவைப் பற்றிக் கூறியவாறு ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள்: ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களது முன்னறிவிப்பிற்கு எனது ஆன்மீக கனவுடன் இருக்கும் ஒப்புமைகளை நான் இன்று விளக்குகின்றேன்.

கூறுகின்றார்கள்: கனவில் நான் பார்த்தேன். எனது நாவில் இந்த சொற்றொடர் வந்தது. நான் வாக்களிக்கப்பட்ட மகன் ஆவேன். அவருக்கு ஒப்பானவர் ஆவேன். அவரது கலீஃபா ஆவேன். இந்த சொற்கள் எனது நாவில் வந்தது. எனக்கு எந்த அளவு வியப்பாக இருந்தது என்றால் வெளிப்படையான முறையில் இவ்வாறு வியப்பு ஏற்பட முடியும் தான். எனது நாவிலிருந்து என்ன சொற்கள் வந்து விட்டன? என்று நான் வியந்தேன். பிறகு சில நண்பர்கள் எனக்கு கவனமூட்டினர். அதாவது, மஸீஹின் ஆன்மாவை உடையவராக இருப்பது பற்றி ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் 1886 ஆம் ஆண்டு பிப்ரவரி 20 –ல் வெளியிடப்பட்ட பிரசுரத்திலும் குறிப்பிடப்பட்டிருக்கின்றது. ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் பிரசுரத்திலும் கூட அவர் உலகில் வருவார். தனது மஸீஹிய ஆன்மா மற்றும் பரிசுத்த ஆவியின் அருளால் பலரையும் நோயிலிருந்தும் குணமடையச் செய்வார் என்று எழுதப்பட்டிருப்பது பற்றி கவனமூட்டினார்கள். இந்த முன்னறிவிப்பிலும் கூட மஸீஹ் என்ற சொல் பயன்படுத்தப்பட்டிருக்கின்றது.

இரண்டாவதாக, நான் கனவில் பார்த்தேன். நான் சிலைகளை உடைக்க வைக்கின்றேன். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களது முன்னறிவிப்பின் அடுத்த பகுதியில் இது சைகையாக சுட்டிக் காட்டப்பட்டிருக்கின்றது. அதாவது அவர் உண்மையின் ஆன்மாவின் அருளால் பலரையும் நோயிலிருந்து குணப்படுத்துவார் என்று கூறப்பட்டிருக்கின்றது. அவர்கள் கூறுகின்றார்கள்: உண்மையின் ஆன்மா என்பது ஏகத்துவத்தின் ஆன்மாவிற்கு கூறப்படுகின்றது.

மூன்றாவதாக, கனவில் நான் ஒருவரை பார்த்தேன். நான் ஓடுகின்றேன். பூமி எனது பாதங்களுக்கு அடியில் சுருங்கிக் கொண்டே செல்கின்றது. வாக்களிக்கப்பட்ட மகன் தொடர்பான முன்னறிவிப்பிலும் அவர் விரைவாக வளர்ச்சி அடைவார் என்ற இந்த சொற்கள் இருக்கின்றன. இவ்வாறே கனவில் நான் பார்த்தேன். நான் சில வெளிநாடுகளுக்கு சென்றுள்ளேன். பிறகு அங்கும் கூட நான் எனது பணிகளை முடித்து விடவில்லை. மாறாக, நான் மேலும் முன்னேறிச் செல்ல எண்ணுகின்றேன்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கு இறைவன் இறக்கிய அந்த சொற்களிலும் இதன் பக்கம் கவனமூட்டப்பட்டிருக்கின்றது. அதில் ''பூமியின் எல்லை வரை அவரது புகழ் பரவி விடும்'' என்று எழுதப்பட்டிருக்கின்றது. இந்த சொற்களும் அவர் மிகத் தொலைவில் செல்வதையும் அவர் தொடர்ந்து கொண்டே இருப்பதையும் சுட்டிக் காட்டுகின்றன. பிறகு முன்னறிவிப்பில் அவர் வெளிப்படையான மற்றும் அந்தரங்கமான அறிவுகளால் நிரப்பப்படுவார் என்று வந்துள்ளது. இதன் பக்கமும் எனது கனவில் சுட்டிக் காட்டப்பட்டிருக்கின்றது. கனவில் நான் மிகவும் வலுவாக நான் எப்படிப்பட்டவன் என்றால் இஸ்லாம் தொடர்பான ஞானங்கள், அரபி பற்றிய ஞானங்கள், இந்த மொழியின் தத்துவம் ஆகியவை நான் தாயின் மடியில் இருக்கும் போது அவனது இரு மார்பகங்களிலிருந்தும் தாய்ப்பாலுடன் சேர்த்து அவை எனக்கு புகட்டப்பட்டன என்று நான் கூறுகின்றேன்.

பிறகு முன்னறிவிப்பில் அவர் இறைவனின் கம்பீரம் வெளிப்படுவதற்குக் காரணமாக இருப்பார் என்று எழுதப்பட்டுள்ளது. இதைப் பற்றியும் கனவில் விளக்கம் இருக்கின்றது. நான் ஏற்கனவே கூறியது போன்று கனவில் எனது நாவின் மீது ஆதிக்கம் செலுத்தப்பட்டிருந்தது. எனது நாவின் மூலம் இறைவன் பேச ஆரம்பித்து விட்டான். பிறகு ஹஸ்ரத் ரஸூலே கரீம் (ஸல்) அவர்கள் வந்தார்கள். அவர்களும் எனது நாவின் மூலமாக பேசினார்கள். பிறகு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் வந்தார்கள். அவர்கள் எனது நாவின் மூலமாக பேச ஆரம்பித்தார்கள். இது அல்லாஹ்வின் கம்பீரத்தின் வியக்கத்தக்க ஒரு தோற்றமாக இருந்தது. அதைப் பற்றி முன்னறிவிப்பிலும் கூறப்பட்டிருக்கின்றது. எனவே, இதுவும் இவ்விரண்டிலுள்ள ஒப்புமைகளாகும். முன்னறிவிப்பில் அவர் செல்வமிக்கவராகவும், மகத்துவமிக்கவராகவும்

இருப்பார் என்று எழுதப்பட்டிருந்தது. கனவிலும் இது காட்டப்பட்டது. ஒரு சமுதாயத்தில் ஒருவரை நான் தலைவராக நியமிக்கின்றேன். மேலும் ஒரு சக்தி படைத்த அரசன் தனக்கு கீழே உள்ளவர்களிடம் கூறுவது போன்று நான் அவரிடம் அப்துஸ் ஸகூர்! எனக்கு முன்னால் நீ இந்த விஷயத்திற்கு பொறுப்பாளியாக இருக்கின்றாய். அதாவது நமது நாடு அண்மையிலுள்ள காலகட்டத்தில் ஏசத்துவத்தின் மீது நம்பிக்கை கொள்ள வேண்டும். இணை வைத்தலை கை விட்டு விட வேண்டும். ரஸூலே கரீம் (ஸல்) அவர்களது போதனைக்கேற்ப செயல்பட வேண்டும். மேலும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களது கட்டளைகளை தன் கண் முன்னால் நிறுத்தி செயல்பட வேண்டும் என்று கூறுகின்றேன். அவர் மகத்துவமிக்கவராக இருப்பார் என்பதற்கு கனவில் எனது நாவில் வந்துள்ள இந்த சொற்களே பொருந்துகிறது.

முன்னறிவிப்பின் நாம் எனது ஆவியை அவருக்குள் ஊதுவோம் என்று வருவது இவர் மீது இறைவனின் வார்த்தைகள் இறங்கும் என்பதை சுட்டிக் காட்டுகின்றது. கனவில் இந்த விஷயம் பற்றியும் கூறப்பட்டிருக்கின்றது.

1936 –ல் மஜ்லிஸே சூராவில் அதாவது ஆலோசனைக் கூட்டத்தில் அவர்கள் உரையாற்றினார்கள். அப்போது பெரும் எண்ணிக்கையில் சஹாபாக்கள் அங்கு இருந்தனர். தாபியீன்களும் (அதாவது சஹாபாக்களைப் பார்த்தவர்களும்) அதிகமாக இருந்தனர். அப்போது ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறினார்கள்:

இப்போது நமது ஜமாஅத்திற்கு கிலாஃபத்தைப் பற்றிய கேள்வி மட்டும் எழவில்லை. வேறு இரண்டு கேள்விகளும் எழுந்துள்ளன. ஒன்று, நபித்துவத்திற்கு அருகிலுள்ள காலகட்டம் தொடர்பான கேள்வியாகும். மற்றொன்று, வாக்களிக்கப்பட்ட கிலாஃபத் தொடர்பான கேள்வியாகும். இந்த இரண்டு விஷயங்களும் எப்படிப்பட்டது என்றால் ஒவ்வொரு கலீஃபாவையும் ஏற்றுக் கொள்பவர்களுக்கு இந்த விஷயங்கள் கிடைக்க முடியாது. அந்தக் காலத்திலுள்ள பொதுமக்கள் ஒருபுறமிருக்கட்டும். கலீஃபாக்கள் கூட நமது சொல், நமது செயல், நமது கட்டளைகள் ஆகியவற்றிலிருந்து நேர்வழியைப் பெற வேண்டும் என்ற தேவையை உடையவராக இருப்பர்.

அவர்கள் தமது கிலாஃபத்தைப் பற்றி கூறுகின்றார்கள்: முதலாவது கலீஃபா வஃபாத் ஆன மறுநாள் அஹ்மதிய்யா ஜமாஅத்தைச் சேர்ந்த மக்கள் ஒன்றுசேர்ந்து எனது கிலாஃபத்தை ஏற்றுக் கொண்டனர் என்பதால் மட்டும் நான் கலீஃபா அல்ல. மாறாக, ஹஸ்ரத் முதல் கலீஃபத்துல் மஸீஹின் கிலாஃபத்திற்கும் முன்னதாக ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் இறைவனிடமிருந்து இல்ஹாம் பெற்று நான் கலீஃபாவாக ஆவேன் என்று கூறியதாலும் நான் கலீஃபாவாக இருக்கின்றேன். எனவே, நான் கலீஃபா அல்ல. மாறாக, வாக்களிக்கப்பட்ட கலீஃபாவாக நான் இருக்கின்றேன். நான் இறைவனால் அனுப்பப்பட்டவன் அல்ல. ஆனால், எனது குரல் இறைவனின் குரல் ஆகும். இறைவன் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் மூலமாக இதைப் பற்றி தெரிவித்திருந்தான். இறைவனால் அனுப்பப்பட்டவர் மற்றும் கிலாஃபத் ஆகியவற்றிற்கு நடுவிலுள்ள உயர் தகுதியாகும். அஹ்மதிய்யா ஜமாஅத் இதை வீணாகப் போக விடும் வகையிலுள்ள சந்தர்ப்பம் அல்ல இது. பிறகு இதன் மூலம் இறைவன் முன்னிலையில் அவர்கள் பெருமை கொள்ள வேண்டும். நபிமார்கள் ஒவ்வொரு நாளும் வருவதில்லை என்ற விஷயம் எவ்வாறு சரியானதாக இருக்கின்றதோ அவ்வாறே வாக்களிக்கப்பட்ட கலீஃபாவும் ஒவ்வொரு நாளம் வருவதில்லை என்ற விஷயமும் சரியானதாக இருக்கின்றது.

மக்கள் நீங்கள் வாக்களிக்கப்பட்ட சீர்திருத்தவாதியாக இருந்தால் அதைப் பற்றி ஏன் அறிவிப்பு செய்யாமல் இருக்கின்றீர்கள் என்ற கேள்விக்கு அவர்கள் பதில் கூறுகின்றார்கள். நான் வாக்களிக்கப்பட்ட சீர்திருத்தவாதியாவேன் என்று என்னை வாதம் செய்ய வைப்பதற்கு மக்கள் முயற்சிகளைக் கூட செய்தனர். ஆனால், நான் வாதம் செய்ய வேண்டிய தேவை என்ன வந்து விட்டது? என்று நான் கேட்கின்றேன். நான் வாக்களிக்கப்பட்ட சீர்திருத்தவாதியாக இருந்தால் நான் வாதம் செய்யாமல் இருப்பதன் காரணமாக எனது தகுதியில் எந்த வித்தியாசமும் வரப்போவதில்லை. இறைதூதர் அல்லாத ஒருவர் தொடர்பாக செய்யப்படும் முன்னறிவிப்பு இருக்கும் போது அதற்காக வாதம் செய்ய வேண்டும் என்ற தேவையில்லை என்பது எனது கொள்கையாகும்.

பிறகு 1944 –ல் அவர்கள் வாதம் செய்து, தான் வாக்களிக்கப்பட்ட சீர்திருத்தவாதியாக இருப்பதாக அறிவிப்பு செய்தார்கள். அப்போது அவர்கள் கூறினார்கள்:

நமது ஜமாஅத்திலுள்ள நண்பர்கள் இந்த முன்னறிவிப்பையும் இதே போன்ற மற்ற முன்னறிவிப்புகளையும் மீண்டும் மீண்டும் எனக்கு முன்னால் எடுத்து வைத்தனர். அவை எனக்கு பொருந்துகின்றது என்பதை நான் வெளிப்படுத்திக் கூற வேண்டும் என்று என்னை வற்புறுத்தினர். உலகம் இந்த கேள்வியை எத்தனை முறை எழுப்பியது என்றால் இதில் ஒரு நீண்ட காலம் கழிந்து விட்டது. எனவே, இந்த நீண்ட காலகட்டம் பற்றியும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களது இல்ஹாமில் செய்தி இருக்கின்றது.

நமது ஜமாஅத்திலுள்ள நண்பர்கள் இந்த முன்னறிவிப்புகளை என்னுடன் தொடர்புபடுத்திக் கூறி வந்ததால் எப்போதும் நான் இந்த முன்னறிவிப்புகளை கவனத்துடன் படிப்பதிலிருந்தும் என்னை தவிர்த்துக் கொண்டேன். தவறான எண்ணம் நிலை பெற்று விடக்கூடாது என்று நான் அஞ்சினேன். ஆனால், இன்று நான் முதன் முறையாக அந்த எல்லா முன்னறிவிப்புகளையும் படித்தேன். இப்போது நான் இந்த முன்னறிவிப்புகளை படித்த பிறகு நான் இறைவனது அருளால் இறைவன் அந்த முன்னறிவிப்பை என் மூலமாகத்தான் நிறைவேற்றியுள்ளான் என்பதை உறுதியாகவும் முழுமையான

நம்பிக்கையுடனும் என்னால் கூற முடியும். இதுபற்றி எந்தவொரு அறிவிப்பும் செய்ய வேண்டிய அவசியம் எனக்கு இல்லை என்று அவர்கள் கூறிய ஒரு காலம் இருந்தது. பிறகு அந்த காலமும் வந்தது. அப்போது இறைவன் அவர்களுக்கு மிகவும் தெளிவாக நீங்களே அந்த வாக்களிக்கப்பட்ட சீர்திருத்தவாதி. எனவே, இதைப் பற்றி அறிவிப்பு செய்யுங்கள் என்று இதைப் பற்றிய அறிவை அவர்களுக்கு திறந்து தந்த பிறகு அவர்கள் இதைப் பற்றி ஆட்சேபனை செய்பவர்கள் மற்றும் இதை ஏற்றுக் கொள்ளாமல் இருப்பவர்கள் ஆகியோருக்கு இதுபற்றி திறந்த சவாலை விடுத்தார்கள்.

அவர்கள் கூறினார்கள்: நான் கூறுகின்றேன். இறைவன் மீது ஆணையிட்டுக் கூறுகின்றேன். நான்தான் வாக்களிக்கப்பட்ட சீர்திருத்தவாதி தொடர்பான முன்னறிவிப்பிற்கு பொருந்தக் கூடியவனாக இருக்கின்றேன். என்னையே இறைவன் இந்த முன்னறிவிப்புகளுக்கேற்ப இருப்பவனாக ஆக்கியுள்ளான். அவற்றை வர வேண்டிய ஒரு வாக்களிக்கப்பட்ட நபர் தொடர்பாக ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறியிருந்தார்கள். எவர் நான் என் தரப்பிலிருந்து இட்டுக்கட்டி பொய்யாக இதனை கூறியிருப்பதாக கருதுகின்றாரோ அல்லது நான் இதுபற்றி பொய்யான விஷயத்தைக் கூறியிருப்பதாக கருதுகின்றாரோ அவர் வரட்டும். இந்த விவகாரம் தொடர்பாக அவர் என்னுடன் முபாஹலா செய்யட்டும் அல்லது தண்டனை மூலமாக பிடிக்கின்ற அந்த இறைவன் மீது ஆணையிட்டு நான் இவ்விஷயத்தில் பொய் கூறியிருப்பதாக இறைவன் என்னிடம் கூறியுள்ளான் என்று கூறட்டும். பிறகு இறைவன் தானாகவே தனது வானத்து அடையாளங்கள் மூலமாக யார் உண்மையாளர்? யார் பொய்யர்? என்பதற்கான தீர்ப்பை வழங்கி விடுவான்.

பிறகு முன்னறிவிப்புகளின் சில பகுதிகள் இருக்கின்றன. அவற்றைப் பற்றிய சில விஷயங்களை கூறுகின்றேன். முன்னறிவிப்பின் ஒரு பகுதியில் 'அவர் வெளிப்படையான அறிவுகளால் நிரப்பப்படுவார்' என்று கூறப்பட்டிருக்கின்றது. முழு இல்ஹாம் 'அவர் வெளிப்படையான மற்றும் அந்தரங்கமான அறிவுகளால் நிரப்பப்படுவார்' என்பதாகும். இதன் ஒரு பகுதியை அதாவது அவர் வெளிப்படையான அறிவுகளால் நிரப்பப்படுவார் என்பதைப் பற்றி ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்:

இந்த முன்னறிவிப்பின் கருத்து இதுவாகும். 'அவர் வெளிப்படையான அறிவால் நிரப்பப்படுவார்' என்ற முன்னறிவிப்பின் இந்த சொற்களில் அவருக்கு இறைவன் புறமிருந்து மார்க்க அறிவும் திருக்குர்ஆன் அறிவும் கற்றுத் தரப்படும் என்ற கருத்து இருக்கின்றது. இறைவன் சுயமே அவரது ஆசிரியராக இருப்பான்.

கூறுகின்றார்கள்: எனக்கு கல்வி எந்த வகையில் புகட்டப்பட்டது என்றால் நான் கல்வி கற்பதில் மனிதனின் கைகள் செயல்படவில்லை என்பதை அது வெளிப்படுத்துகின்றது.

பிறகு அன்னார் கூறுகின்றார்கள்: அல்லாஹ் தனது மலக்குகள் மூலம் எனக்கு திருக்குர்ஆனின் அறிவை வழங்கினான். எனக்குள் அவன் எத்தகைய திறமையை உருவாக்கி விட்டான் என்றால் ஒருவருக்கு கருவூலத்தின் சாவி கிடைத்தது போன்று அது இருந்தது. இவ்வாறே எனக்கு திருக்குர்ஆனின் அறிவின் சாவி கிடைத்து விட்டது. உலகிலுள்ள எந்தவொரு ஆலிமும் எனக்கு முன்னால் வந்து நான் அவரிடம் திருக்குர்ஆனின் சிறப்பை வெளிப்படுத்த முடியாத நிலை ஒருபோதும் இருக்காது. நான் இறைவனது வார்த்தைகளிலிருந்து அவருக்கு பதில் கூறுவேன் என்று நான் வாதம் செய்கின்றேன். திருக்குர்ஆனின் வசனங்கள் மூலமாக அவரது ஆட்சேபனைகளை நான் மறுத்து விடுவேன்.

இந்த எழுத்துக்களை எழுதுபவனாகிய நான் பல அறிவுகளையும் மலக்குகளிடமிருந்து கற்றுள்ளேன். எனக்கு ஒருமுறை ஒரு மலக்கு சூரா ஃபாத்திஹாவின் விளக்கத்தைக் கற்றுக் கொடுத்தார். அந்த சமயத்திலிருந்து இப்போது வரை சூரா ஃபாத்திஹா தொடர்பான எந்த அளவு கருத்துக்கள் எனக்கு திறந்து தரப்பட்டன என்றால் அதற்கு ஓர் எல்லையே இல்லை. எந்தவொரு மதம் அல்லது சமுதாயத்தைச் சேர்ந்த மனிதரும் ஆன்மீக ஞானங்கள் தொடர்பாக தன்னிடமுள்ள எல்லா நூல்களிலிருந்தும் எவற்றையெல்லாம் எடுக்க முடியுமோ அவற்றையெல்லாம் எடுத்து வைத்தாலும் அதைவிட அதிகமான கருத்துக்ளை சூரா ஃபாத்திஹாவிலிருந்தே என்னால் எடுத்துக் காட்ட முடியும்.

பிறகு அவர்கள் கூறுகின்றார்கள்: கிலாஃபத் பொறுப்பை ஏற்ற பிறகு அல்லாஹ் எனக்கு திருக்குர்ஆனின் அறிவை எந்த அளவு அதிகமாக திறந்து தந்தான் என்றால் மறுமை நாள் வரை முஸ்லிம் சமுதாயம் எனது நூல்களைப் படித்து அதிலிருந்து பயன் பெற வேண்டும் என்ற கட்டாயத்திற்கு ஆளாகி இருக்கின்றது.

பிறகு அவர்கள் கூறுகின்றார்கள்: 1907 –ல் முதன் முறையாக நான் பொதுக் கூட்டத்தில் பேசினேன். ஹஸ்ரத் முதல் கலீஃபத்துல் மஸீஹ் அவர்களும் இருந்தார்கள். நான் சொற்பொழிவை நிறைவு செய்து விட்டு அமர்ந்ததும் எனக்கு நினைவில் இருக்கின்றது. அப்போது ஹஸ்ரத் முதல் கலீஃபத்துல் மஸீஹ் அவர்கள் எழுந்து நின்றவாறு மியான்! நான் உங்களுக்கு வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றேன். நீங்கள் எத்தகைய சிறந்த சொற்பொழிவை நிகழ்த்தினீர்கள் என்றால் நான் உங்களை மகிழ்விப்பதற்காக இதனை கூறவில்லை. நான் உங்களுக்கு உறுதியாக ஒன்றை கூறுகின்றேன். நான் அதிகமாக படிக்கக் கூடியவன். நான் பெரும் பெரும் தப்ஸீர்களை படித்துள்ளேன். ஆனால் நானும் கூட நீங்கள் கொடுத்த திருக்குர்ஆன் விளக்கவுரையிலிருந்து இதற்கு முன்புள்ள விளக்கவுரைகளில் இல்லாத, மேலும் இன்னும் சொல்வதென்றால் எனக்கு இதற்கு முன்னால் தெரியாமலேயே இருந்த பல கருத்துக்களையும் நான் உங்களது விளக்கவுரை மூலமாக தெரிந்து கொண்டேன் என்று கூறினார்கள்.

'அவர் அந்தரங்கமான அறிவால் நிரப்பப்படுவார்' என்பதைப் பற்றி கூறுகின்றேன். அவர்கள் கூறுகின்றார்கள்: அந்தரங்க அறிவு என்பது சிறப்பான முறையில் இறைவனிடம் மட்டும் தொடர்புள்ள அறிவாகும். அதாவது அவை மறைவான செய்திகளாகும். இதனை அவன் தனது அடியார்களில் எவருக்கு அவன் இந்த உலகில் ஒரு சிறப்பான தொண்டினை ஒப்படைத்துள்ளானோ அவருக்கு வழங்குகின்றான். அதன் மூலம் இறைவனுடன் அவருக்கு இருக்கும் தொடர்பு தெரிய வரும். அவற்றின் மூலமாக மக்களது ஈமானை புதுப்பிக்க முடியும். ஆக, இந் அம்சத்திலும் அல்லாஹ் என் மீது சிறப்பாக அருள் புரிந்துள்ளான். நூற்றுக்கணக்கான கனவுகளும் இல்ஹாம்களும் எனக்கு வந்துள்ளன. அவற்றில் மறைவான செய்திகள் இருந்தன.

மேலும் ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் தொடர்பாக திருக்குர்ஆனில் வருகின்ற அதே வசனமேயாகும். ஆனால் அங்குள்ள சொற்கள் இவையாகும். அதாவது 'உம்மை ஏற்றுக் கொள்பவர்களை உம்மை நிராகரிப்பவர்களை விட மறுமை நாள் வரை நாம் மேலோங்கச் செய்வோம்' என்று வந்துள்ளது.

எனக்கு வந்த இல்ஹாமில், இது முன்னர் கூறப்பட்டதை விட மிகவும் வலியுறுத்திக் கூறப்பட்ட விஷயமாகும். அதாவது, 'நான் என் இருப்பின் மீது ஆணையிட்டுக் கூறுகின்றேன். உங்களை நிராகரிப்பவர்கள் மீது மறுமை நாள் வரை வெற்றியை வழங்குவேன்.' நான் கூறியது போன்றே இந்த இல்ஹாமை நான் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களிடம் கூறினேன். அவர்கள் அதனை எழுதிக் கொண்டார்கள். நான் நீண்ட காலமாக இந்த இல்ஹாமை நண்பர்களுக்கு கூறி வந்துள்ளேன். இதன் விளைவாக எவ்வாறெல்லாம் எனக்கு எதிர்ப்பு இருந்து வந்தது? ஆனால், அல்லாஹ் எனக்கு வெற்றியை வழங்கினான்.

பிறகு 'அவர் மூன்றை நான்காக்குவார்' என்ற முன்னறிவிப்பு தொடர்பாக அவர்கள் கூறுகின்றார்கள்: முதலாவதாக, எனக்கு முன்னதாக மிர்ஸா சுல்தான் அஹ்மது சாஹிப், மிர்ஸா ஃபஸல் அஹ்மது சாஹிப் மற்றும் பஷீர் ஆகியோர் பிறந்தனர். நான்காவதாக நான் பிறந்தேன்.

இரண்டாவதாக, எனக்கு பிறகு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கு மூன்று மகள்கள் பிறந்தனர். இவ்வாறு அந்த மூவரை நான் நான்காக ஆக்கியுள்ளேன். அதாவது மிர்ஸா பஷீர் அஹ்மது ஆகிய மூவர் பிறந்தனர். நான்காவதாக நான் இருக்கின்றேன்.

மூன்றாவதாக, இவ்வாறும் நான் மூன்றை நான்காக்குவேன் என்று நிரூபிக்கப்பட்டிருக்கின்றது. ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களது சந்ததிகளில் உயிரோடு இருப்பவர்களில் மூன்று சகோதரர்களாகிய நாங்கள் அதாவது நான், மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப், மிர்ஸா ஷரீஃப் அஹ்மது சாஹிப் ஆகியோர் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களை ஏற்றுக் கொண்டதன் அடிப்படையில் அவர்களது ஆன்மீக புதல்வர்களில் நாங்களும் ஒருவராக இருந்தோம். ஆனால், மிர்ஸா சுல்தான் அஹ்மது சாஹிப் அவர்கள் அன்னாரது ஆன்மீக சந்ததிகளில் ஒருவராக இருக்கவில்லை. எனது காலகட்டம் வந்த போது அல்லாஹ் இதற்கான ஏற்பாட்டை எவ்வாறு செய்தான் என்றால் அவர்கள் என் மூலமாக அஹ்மதிய்யத்தில் இணைந்தார்கள்.

**1886** ஆம் ஆண்டு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் இந்த முன்னறிவிப்பை செய்தார்கள். இந்த வகையிலும் நான் மூன்றை நான்காக்குபவனாக உள்ளேன். இறை அறிவிப்பு வந்த பிறகு நான்காவது வருடம் நான் பிறந்தேன். இவ்வாறும் நான் மூன்றை நான்கு ஆக்குபவனாக ஆகியுள்ளேன். அவ்வாறே நடந்தது. இதற்கேற்பவே எனது பிறப்பு நிகழ்ந்தது.

'இறைவனின் கம்பீரம் வெளிப்படுவதற்கு காரணமாக அவர் இருப்பார்' என்ற முன்னறிவிப்பு பற்றி கூறுகின்றார்கள்: இந்த செய்தியும் எனது காலத்தில் நிறைவேறியது. நான் கிலாஃபத் பொறுப்பில் அமர்ந்த உடனேயே முதலாம் உலகப் போர் நடைபெற்றது. இப்போது இரண்டாவது உலகப் போர் ஆரம்பமாகி இருக்கின்றது. அதன் மூலம் உலகில் இறைவனின் கம்பீரம் வெளிப்பட்டுக் கொண்டிருக்கின்றது.

'அவர் கைதிகளை விடுவிப்பதற்கு காரணமாக இருப்பார்' என்று முன்னறிவிப்பில் கூறப்பட்டுள்ளது. அல்லாஹ் இந்த முன்னறிவிப்பை என் மூலமாக நிறைவேற்றினான். முதலாவதாக, என் மூலமாக இறைவன் முஸ்லிம்கள் கவனம் செலுத்தாமல் இருந்து வந்த அந்த சமுதாயங்களுக்கு நேர்வழியைக் காட்டினான். அவை மிகவும் இழிவான வீழ்ச்சி அடைந்த நிலையில் இருந்தன. அவர்கள் கைதிகளைப் போன்ற வாழ்க்கையை நடத்தி வந்தனர்.

அவர்கள் கூறுகின்றார்கள்: கைதிகளை விடுவிப்பது என்ற வகையில் காஷ்மீர் சம்பவம் கூட இந்த முன்னறிவிப்பின் உண்மைக்கு ஓர் வலுவான ஆதாரமாகத் திகழ்கின்றது. இந்த சம்பவங்களை நிதானமாக சிந்திக்கின்ற ஒவ்வொருவரும் அல்லாஹ் என் மூலமாகத்தான் காஷ்மீரிகளை விடுவிப்பதற்கான ஏற்பாட்டை செய்தான். அவர்களது எதிரிகளை தோல்வி அடையச் செய்தான் என்பதை ஏற்றுக் கொள்ளாமல் இருக்க முடியாது.

அவர்கள் கூறுகின்றார்கள்: இந்த முன்னறிவிப்பில் இரண்டு மிகப்பெரிய முக்கிய பகுதிகள் உள்ளன. முதலாவதாக, ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கு இறைவனிடமிருந்து நான் உனது பெயரை பூமியின் எல்லை வரை எட்ட

வைப்பேன் என்ற செய்தி தெரிவிக்கப்பட்டிருந்தது. இப்போது வெறுமனே மகன் பிறப்பதால் மட்டும் அவர்களது பெயர் பூமியின் எல்லை வரை சென்றடைந்துவிட முடியாது. முழு உலகிலும் பிரபலமாகும் வகையிலுள்ள பணிகள் அவர்கள் மூலமாக நடைபெறாத வரை இந்த முன்னறிவிப்பு நிறைவேற முடியாது. இதன் காரணமாக அவர்களது பெயர் பிரசித்தி பெற்றதாக ஆகி விடுகின்றது. அவ்வாறே நடந்ததை நாம் பார்க்கின்றோம். நான் பிறந்து இரண்டு அல்லது இரண்டரை ஆண்டுகள் கழிந்த பிறகு அவர்கள் மக்களிடம் பைஅத் வாங்கினார்கள். இவ்வாறு அஹ்மதிய்யா இயக்கத்தின் அடித்தளம் நிலைநாட்டப்பட்டு விட்டது.

கூறுகின்றார்கள்: இறைவன் முன்னறிவிப்பில் குறிப்பிட்டதற்கேற்ப அதாவது அவரது புகழ் பூமியின் எல்லை வரை பரவி விடும் என்பதற்கேற்ப அல்லாஹ் எனக்கு பல்வேறு நாடுகளில் அஹ்மதிய்யா பிரச்சார நிலையங்களை நிறுவுவதற்கான நல்வாய்ப்பை வழங்கினான். பிறகு இந்த தொடர் வளர்ச்சி பெற்று மேலும் முன்னேறியது.

முன்னறிவிப்புகளில் பல பகுதிகளும் அவர்களது வருகை மூலம் மிகவும் மகிமையுடன் நிறைவேறியுள்ளது. ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களது உண்மையை அது வெளிப்படுத்தியது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) மற்றும் இஸ்லாத்தின் மகிமையை அது மேலும் அதிகரிக்கும்படி செய்தது. அல்லாஹ் அவர்கள் மீது எப்போதும் தனது கருணையைப் பொழிந்து கொண்டிருப்பானாக! நமக்கும் நமது பொறுப்புகளை நிறைவேற்றுவதற்கான நல்வாய்ப்பை வழங்குவானாக!

தொழுகைக்குப் பிறகு நான் ஒரு ஜனாஸா காயிப் தொழுகையையும் தொழ வைப்பேன். அது ஜமாஅத்தின் முபல்லிக்கான மதிப்பிற்குரிய மவ்லானா முஹம்மது ஸித்தீக் சாஹிப் குர்தாஸ்பூரி உடையதாகும்.

From : Nazarath Nashr-o-Isha’ath, Qadian - 143 516, Distt Gurdaspur, Punjab.

Translated by **Maulavi M. RAFEEQ AHMAD** for Tamil Desk